# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 185/நகராட்சி/2018**
**நாள் : 26/12/2018**

**ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கம்,**
**சென்னை – 600 117.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**சென்னை – 600 044.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, பழைய பல்லவபுரம், பெருமாள் நகர், 8–வது குறுக்குத் தெரு, 3/121 எண்ணிட்ட முகவரியில் செயல்பட்டுவரும் ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கச் செயலாளர் அவர்களின் 21.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 185/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் விசாரணையின்போது நலச் சங்கத்தினர் மற்றும் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, பழைய பல்லவபுரம், பெருமாள் நகர், 8–வது குறுக்குத் தெரு, 3/121 எண்ணிட்ட முகவரியில் செயல்பட்டு வரும் ஸ்ரீபெருமாள் நகர் நலச் சங்கத்தின் செயலர், தனது முறையீட்டு மனுவில் பெருமாள் நகர் 2–வது மற்றும் 3–வது குறுக்குத் தெருக்களில் அமைக்கப்பட்ட கால்வாய்கள் பள்ளமாகவும், 2–வது பிரதான சாலையில் உள்ள கால்வாய் உயரமாகவும் உள்ளதால், 2–வது பிரதான சாலையில் உள்ள கழிவு நீர் 2–வது மற்றும் 3–வது குறுக்குத் தெருவில் உள்ள கால்வாய்களுக்குள் வடிந்து அந்நீர் வெளியேறாமல் தேங்கி நிற்கிறது என்றும் அதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக 2014–ஆம் ஆண்டு முதல் நகராட்சிக்கு முறையீடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து, சம்பந்தப்பட்ட கால்வாய்களை உயர்த்தி கழிவு நீர் தேங்காமல் வழிந்தோடுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சிக்கு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, ஸ்ரீபெருமாள் நகர் 2–வது மற்றும் 3–வது குறுக்குத் தெருவில் உள்ள கால்வாய்களை தூர்வாரவும் மற்றும் சேதமடைந்த பகுதிகளை சரி செய்வதற்கும் ரூபாய் 2.50 இலட்சம் மதிப்பில் பணிகளை மேற்கொள்வதற்கு 16.10.2018–இல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதற்கு 31.10.2018 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.325–இல் பின்னேற்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 07.11.2018 நாளிட்ட பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் செயல்முறை எண்.1652/இ1/2017–இல் பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட ஆவண நகல்களை 24.12.2018 அன்று நடைபெற்ற விசாரணையின் போது நகராட்சி ஆணையர் சமர்ப்பித்தார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 24.12.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதுடன், 2–வது மற்றும் 3–வது தெருக்களில் கழிவு நீர் தேங்காமலிருக்க நகராட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்து நலச்சங்க உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது. பல்லவபுரம் நகராட்சி, வார்டு எண்.17, ஸ்ரீபெருமாள் நகர் 2.வது மற்றும் 3–வது குறுக்குத் தெருக்களில் உள்ள கால்வாய்களை ரூபாய் 2.50 லட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிலும் பணி ஆணையிலும் 1–வது மற்றும் 3–வது குறுக்குத் தெருவில் உள்ள கால்வாய்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சீரமைக்கப்பட வேண்டிய சரியான கால்வாய்களைக் கண்டறிந்து , அக்கால்வாய்களை சீரமைத்து , கழிவுநீர் தேங்காமல் வழிந்தோடச் செய்வதற்கான பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/12/201

செயலாளர்.

31.12.18

31/12/18

பெறுநர்

1. செயலாளர்,
ஸ்ரீபெருமாள் நகர் நலவாழ்வு சங்கம்,
எண்.3/121, 8–வது குறுக்குத் தெரு,
பெருமாள் நகர், பழைய பல்லவபுரம்,
சென்னை – 117.

2. நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி